
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 27 இதழ் - 9 செப்டம்பர் 2014

தனிப்பிரதி ரூ.10/-



ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

**காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,**
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும்**
**இணைந்து நடத்தும்**

# பதினேழாம் வேதாகம கருத்தரங்கம்

# 17th Annual Bible Lectureship

கருப்பொருள் : " **கிறிஸ்தவ குடும்பம்** "

THEME : " The Christian Family "

**நாள் : அக்டோபர் 3, 4 – 2014** ( வெள்ளி, சனி )
(அரசு விடுமுறை நாட்கள்)

**Date : October 3, 4 - 2014** ( Friday, Saturday )

**நேரம்**

வெள்ளி : காலை 8:45 - மாலை 4:45 மணி
சனி : காலை 8:45 - மதியம் 1:00 மணி

**இடம்**

**கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701, தமிழ்நாடு.

- வெளியூரிலிருந்து வருபவர்களுக்கு உணவும்,தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும்,பெண்களுக்கும் தனித் தனி இடம் உண்டு.

**தொடர்புக்கு : 98427 30382, 99655 30385, 98652 90572**

## ஆசானின் அறிவுரையிலே ...


ஆசிரியர் உரை ............. 1

கருத்தரங்கம் .................... 9

ஏன் மனந்திரும்புதல் ................ 10

பெண்கள் பகுதி ...................... 15

வாலிபர் பகுதி ..................... 19

சிறுவர் பகுதி ....................... 23

ஆவிக்குரியவர்களாயிருங்கள் ..... 26

மதமாற்றமா? மனமாற்றமா ? ..... 29

வசன ரீதியான கிறிஸ்துவின் .... 31


- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 27 SEPTEMBER - 2014 Issue - 9**


ஆசிரியர் உரை

# நம்மையல்லாமல் பூரணராகதபடிக்கு...

" இப்பூவுலகில் வாழும் எல்லோருக்கும் அவரவர்களுக்கென்று தனித்தன்மை இருந்தாலும், ஒட்டுமொத்த மானிடத்திற்கும் பொதுவானவைகள் என்று சொல்லத்தக்க சில அம்சங்களும் இருக்கவே செய்கின்றன. அவைகளில் ஒன்று தங்களுக்கும் ஒரு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்பது. அது ஒரு குடும்ப நிகழ்வாக இருந்தாலும், அது ஒரு சமுதாயப் பங்களிப்பாக இருந்தாலும், அது ஒரு ஆன்மீகம் சம்பந்தப்பட்ட காரியமாக இருந்தாலும், இந்த நினைப்பு எல்லோருக்குள்ளாகவும் மேலோங்கியே காணப்படுகிறது. தகுதியும், திறமையுமுள்ளவர்களிடம் மாத்திரம் இந்த எண்ணம் காணப்படாமல் கையாலாகதவர்களிடம் கூட இது மிகுந்திருக்கிறது. ஆகவே, ஒரு காரியம் கெட்டுவிடக்கூடாது என்பதற்காகவும், சம்பந்தப்பட்டவர்களைச் சிறப்பான செயல்பாட்டிற்கு எப்படியாவது இழுத்து வர வேண்டுமென்பதற்காகவும் தகுதியற்றவர்களுக்குக்கூட அவ்வப்போது முக்கியத்துவம் கொடுக்கப்படும். இது தவிர சிலவேளைகளில், தாங்கள் யார் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டிய அளவுக்குப் புரிந்து கொள்ளாமலிருப்பவர்களுக்கு ஓர் உணர்வை ஏற்படுத்தி அவர்களின் நிலையை மேம்படுத்துவதற்காகவும் சிலருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். என்னுடைய இக்கருத்தை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்.

கிட்டத்தட்ட இந்தக் கடைசிக் கருத்தினடிப்படையிலான ஒரு கண்ணோட்டத்தைத்தான் நம்முடைய தலைப்பு இடம் பெற்றிருக்கும்

எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் நாம் காணமுடியும். தங்களின் பக்தி நிலை என்ன, அதன் சிலாக்கியமும், மேன்மையும் என்ன என்பதை அறிந்து உணராமலிருந்த எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கு " பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்களைக் காட்டிலும் நீங்கள் பாக்கியம் பெற்றவர்கள் என்பதை எடுத்து விளக்கி ", அவர்களின் பக்தி நிலையை மேம்படுத்த வேண்டுமென்ற ஓர் எதிர்பார்ப்பில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் அறிய, உள்ளே செல்லுமுன் இதன் பின்னணி குறித்து நமது வழக்கத்தின்படியாகப் பார்த்து விடுவோம்.

புதிய ஏற்பாட்டில் உள்ள நூல்களுள் " 13 அதிகாரங்களும், 303 வசனங்களும் " கொண்ட எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபம் சிறப்புக் குரியது. இதன் ஆசிரியர் யாரென்பது நமக்குப் புரியாத ஒரு காரணத்திற் காகப் பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப்படவில்லை. இந்நிருபம், மற்ற நிருபங்களைப் போலில்லாமல், ஒரு கட்டுரைபோல் ஆரம்பமாகி, ஒரு பிரசங்கமாக வளர்ந்து, ஒரு கடிதம்போல் முடிகிறது.

மெய் கிறிஸ்தவர்களுக்கு இந்நூல் மூன்று முக்கிய நன்மைகளைச் செய்கிறது. 1. நீங்கள் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பதை நினைவுக்குக் கொண்டு வருகிறது. 2. கிறிஸ்து எல்லாரிலும், எல்லா வற்றிலும் மேலானவர் என்பதை மனதில் பதிய வைக்கிறது. 3. விழுந்து போவதின் விளைவைக் கடுமையாக எச்சரிக்கிறது.

இப்படிப்பட்ட நூலின் இறுதிப் பகுதியில் தான், நம் தலைப்புக்கான அதிகாரம் இடம்பெற்றுள்ளது. சற்றேறக்குறைய சிருஷ்டிப்பு முதல், நற்செய்தி நூல்களின் காலம் வரைக்குமான ஒரு 4000 ஆண்டு கால வரலாற்றைச் சக்கையாகப் பிழிந்து சுவைமிக்க சாறாக இவ்வதிகாரம் தருகிறது. இதை வெறுமனே விசுவாச வீரர்களின் பட்டியலாக மாத்திரம் நாம் பார்க்காமல், விசுவாசத்திற்கான உன்னதமான விளக்கமாகப் பார்க்க வேண்டும். ஆம், (1) 11:1-7 வசனங்கள், தேவனைப் பிரியப்படுத்தும் விசுவாசம் எத்தகையது என்பது பற்றியும், (2) 11:8-22 வசனப்பகுதி, வாக்குத்தத்தங்களை நம்பி அணைத்துக் கொள்ளுதல் என்றால் என்ன என்பது பற்றியும், (3) 11:23-40 வசனங்கள் உலகத்தை மேற்கொள்ளும் விசுவாசம் எப்படியிருக்க வேண்டுமென்பது பற்றியும் விளக்குகிறது. இப்படியாகப் பேசிக்கொண்டு வரும் எபிரெயர் ஆசிரியர் தான், வேதாகம அதிகாரங்களின் எவரெஸ்ட் ஆக விளங்கும் இந்தப் பதினோராம் அதிகாரத்தை இப்படியாக முடிக்கிறார். " *இவர்களெல்லாரும் விசுவாசத்தி னாலே நற்சாட்சி பெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருக் கிறார்*". (11:39,40) என்று.

சிறப்புமிக்க இந்த அதிகாரத்தில் " விசுவாசத்தினாலே ஆபிரகாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப் போல சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்திரராகிய ஈசாக்கோடும், யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான் " (11:4) என்று சொல்லி, *வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை ஆபிரகாம் அடைந்தான்* என்று கூறும் அதே ஆவியானவர், இவ்வதிகாரத்தை நிறைவு செய்யும்போது, தான் முன் சொன்னதற்கு மாறாக, " இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும் *வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள்* " என்று வெளிப்படுத்துகிறார். அப்படியானால், ஆவியானவர் தனக்குத் தானே முரண்படுகிறாரா? முழு நிச்சயமாக அப்படியிருக்காது.

ஆம், தேவ வெளிப்பாட்டின்படியான எதுவும் ஒருபோதும் தவறாக இருக்காது, இருக்கவே இருக்காது. அப்படியானால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடைந்தான் என்பதற்கும் அர்த்தம் இருக்க வேண்டும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனான் என்பதற்கும் பொருள் இருக்க வேண்டும். ஆகவே, இப்பொழுது நாம் நமக்கான வசனப் பகுதிக்குள்ளாகச் சென்று, நம்மால் பெற்றுக்கொள்ள முடிகின்ற காரியங்களை கவனிப்போம்.

**I வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடைந்தார்கள் - அடையாமற் போனார்கள்.**

எபிரெயர் 11:39,40 ஆகிய வசனங்களிலிருந்து நம்மால் அறிந்து கொள்ள முடிகிற முதல் உண்மை, முன்னோர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடைந்தும் அடையாமலும் போனார்கள் என்பது.

வாக்குத்தத்தம் என்பது " ஒன்றைச் செய்வேன் அல்லது ஒன்றைச் செய்யமாட்டேன் வாய்மொழியாகவோ அல்லது எழுத்துப்பூர்வமாகவோ செய்யப்படும் ஓர் ஒப்பந்தம் ". இந்தப் பொருளினடிப்படையில் பார்க்கும் போது, முற்பிதாக்கள் உட்பட முன்னோர்கள் வாக்குத்தத்தத்தை அடைந்தும், அடையாமலும் வாழ்ந்து வந்துள்ளார்கள். முதலில் வாக்குத்தத்தத்தைத் தங்கள் வாழ்நாளில் அடைந்தார்கள் என்பதற்கு சில உதாரணங்கள். 1. ஆதியாகமம் 12ம் அதிகாரத்தில் நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ (12:1) என தேவன் ஆபிரகாமை அழைத்தார். அந்த வாக்கை நம்பிச் சென்ற ஆபிரகாம், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தைச் சுதந்தரித்துப் பிள்ளைகளோடும், பிள்ளைகளின் பிள்ளைகளோடும் குடியிருந்தான் (ஆதி. 15:7; எபி 11:9) இதன் மூலம் வாக்குத்தத்தத்தை அடையவே அடைந்தான் . 2. அதுபோல சாராளும் ஒரு கட்டத்தில் சந்தேகம் அடைந்தாலும், தேவ வாக்குத்தத்தத்தை விசுவாசித்து (ஆதி. 18:12-15) வாக்குத்தத்தத்தின்படியான ஒரு குமாரனைப் பெற்றெடுத்தாள் (ஆதி. 21:2,3). இன்னும், விசுவாச

வீரர்களான " கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது போன்றவர்கள் ராஜ்ஜியங்களைச் ஜெயித்தார்கள்..., வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள்..." (எபி. 11:32,33) என்று வசனங்களின் வழியாக அறிகிறோம். இவைகளெல்லாம் நமக்கு என்ன சொல்லுகிறது? அவர்கள் பூமிக்குண்டான வாக்குத்தத்தங்களை தங்களின் வாழ்நாளில் பெற்றே வாழ்ந்து மரித்திருக்கிறார்கள். ஆனாலும், அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையவில்லை என்று எபிரெயர் ஆசிரியர் கூறுவதையும் நாம் லேசில் எடுத்துக்கொள்ள முடியாது. அப்படியானால் அதன் பொருள் என்ன?

பூமிக்குரிய வாக்குத்தத்தம் அல்லாமல் அவர்கள் பெற்றுக் கொள்ளாமற் போன வேறே ஒரு வாக்குத்தத்தமும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தானே. ஆபிரகாமை தேவன் அழைத்தபோது, " பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் " என்றார் (ஆதி. 12:3), தொடர்ந்து அதே ஆபிரகாமிடம், " நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் *சந்ததிக்குள்* பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என் பேரில் ஆணையிட்டேன் " என்றார் (ஆதி. 22:18). இந்த வசனங்கள் இலைமறைவு காயாக ஓர் உண்மையைப் பேசியிருந்தாலும், அப்போஸ்தலன் பவுல் கலாத்தியருக்கு எழுதும்போது, இதற்கான நேரடிப் பொருளைப் புட்டு வைக்கிறார். " ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். **அந்தச் சந்ததி கிறிஸ்துவே** " (கலா. 3:16) என்று. ஆக, அவர்கள் அடையாமற்போன கிறிஸ்து பற்றிய வாக்குத்தத்தமும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்திருக்கிறது.

இப்பொழுது புரிகிறதா? கிறிஸ்து பற்றிய இந்த வாக்குத்தத்தத்தைத் தான் ஆபிரகாம் போன்ற முன்னோர்கள் அடையவில்லை என்று. ஒருவேளை தங்கள் வாழ்நாளில் இதை அடையாமறபோனாலும், "...தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு... விசுவாசத்தோடே மரித்துள்ளார்கள் " (11:13) இத்தனைக்கும் இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றவர்கள் நம்மைப் போல விசுவாசமே அற்றவர்களோ, விசுவாச வாழ்க்கையில் துர்ச்சாட்சி பெற்றவர்களோ இல்லை. இவர்களெல்லாம் தங்கள் வாழ்நாட்காலத்தில் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறாதா என்று அறிந்து கொள்ள முயற்சித்து, அவை குறித்து கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினபோது, அவர்கள் காலத்தில் அல்ல என்று தெளிவுபடுத்தப்பட்டது (1 பேதுரு 1:10-12)

அருமையானவர்களே, இந்த உண்மையைத்தான், எபிரெயர் ஆசிரியர், " *இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்* " என்று குறிப்பிட்டுள்ளார். " காலம் நிறைவேறும் வரைக்கும் " அவர்களுக்குக்

கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே வந்தது. நற்சாட்சி பெற்ற முன்னோர்களும் இதைக் காணமால் மரித்துக்கொண்டே வந்தார்கள்.

## II. நற்சாட்சி பெற்றார்கள் – பூரணத்தை அடையவில்லை.

எபிரெயர் 11:39,40 ஆகிய வசனங்களிலிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகிற அடுத்த உண்மை, முன்னோர்கள் நற்சாட்சி பெற்றும் பூரணத்தை அடையவில்லை என்பது.

" சாட்சி " என்ற வார்த்தைக்கான பொருள்களில் ஒன்று பிறரால் அல்லது " பொதுவானவர்களால் செய்யப்படும் மதிப்பீடு " என்பது. இந்த மதிப்பீடு மனிதர்களிடமிருந்தும் வரலாம், தேவனிடமிருந்தும் இருக்கலாம். இப்படிப்பட்ட மதிப்பீடு ஒருவருடைய செயலினடிப்படையிலும், வாழ்க்கை யினடிப்படையிலும் இருக்கும். இதன்படி ஒவ்வொரு மனிதனும் " சாட்சி " என்ற வார்த்தையோடு சம்பந்தம் உடையவனாகவே இருப்பான். ஆயினும் அந்த சாட்சி " நற்சாட்சியா " அல்லது " துர்சாட்சியா " என்பது அவனவனுடைய செயல்களால் தீர்மானிக்கப்படும். ஆபேலுடைய வாழ்க்கையைக் கண்ட தேவன் அவனை " நீதிமான் " என்று " சாட்சி " சொன்னார் (11:4) ஆபேல் மாத்திரமல்ல, ஆபேல் உட்பட முன்னோர்கள், குறிப்பாக விசுவாச வீரர்களின் பட்டியலில் இடம் பெறப்போகிற யாவரும் "நற்சாட்சி " பெற்றவர்கள் என்று இந்த அதிகாரத்தை ஆரம்பிக்கும் போதே இதன் ஆசிரியர் அறிவிக்கிறார் (11:2).

இப்படிபட்ட உன்னத வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும் தாங்கள் வாழ்ந்த காலத்தில் நிரந்தரமான பாவநிவர்த்தியையும், குற்ற மற்ற மனச் சாட்சியையும் பெற்று "பூரணத்தை" அடைய முடியவில்லை. ஒரு வேளை, அவர்கள் முற்பிதாக்களின் காலத்திலே வாழ்ந்த நீதிமான்களாக இருந்தாலும், மோசேயின் காலத்திலே வாழ்ந்த நீதிமான்களாக இருந் தாலும் இதுதான் நிலை. "பூரணம்" என்ற வார்த்தைக்கான பொருள் "முழுமை ", "முடிவான நிலைக்கு முற்றிலும் தகுதி " என்பன. ஆயினும் இவர்களெல்லாரும் " முடிவான நிலைக்கு முற்றிலும் தகுதி அடையாமல் " பூரணம் என்ற வார்த்தைக்கு அந்நியர்களாகவே வாழ்ந்து மரித்துள்ளார்கள்.

ஏனெனில், பழைய பிரமாணத்தின்படியான பக்திச் செயல்பாடுகள் எதுவும் அவர்களுக்கு பூரணத்தைக் கொடுக்கவில்லை. எபிரெயர் ஆசிரி யரைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் இவ்வுண்மையை மிகத் தெளிவாக இந்நூலில் விளக்கியுள்ளார். " *அல்லாமலும், இஸ்ரவேல் ஜனங்கள் லேவி கோத்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்தல்லவோ நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள். அந்த ஆசாரிய முறைமை யினாலே பூரணப்படுதல் உண்டாயிருக்குமானால், ஆரோனுடைய*

*முறைமையின்படி அழைக்கப்படாமல், மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படி அழைக்கப்பட்ட வேறொரு ஆசாரியர் எழும்ப வேண்டுவதென்ன?* " (எபி. 7:11) என்ற கேள்வியோடு நிற்காமல், " நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை " (7:19) என்றும் வெளிப்படுத்தியுள்ளார். மேலும், " அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும், பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச் சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம் ". (எபி. 9:9) என்றும் அறிவிக்கிறார்.

இன்னும் இதுவும் போதாதென்று, பத்தாம் அதிகாரத்திற்கு வரும்போது " இப்படியிருக்க நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரே விதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது " (எபி. 10:1) எனவும் கூறுகிறார். இங்கே " ஒருக்காலும் " என்பதை நாம் குனித்து கவனிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் பலிகள் " பாவ நிவாரணத்திற்காகச் " செலுத்தப்பட்டது (லேவி. 17ம் அதிகாரம்) " பாவ நிவாரணம் " என்ற எபிரெய மொழி வார்த்தைக்கான பொருள், "மூடுதல்" அல்லது "மூடிப்போடுதல்" என்பது. இதன்படி அவர்கள் வருடந்தோறும் செலுத்தின பலிகளின் இரத்தம் அவர்களின் பாவத்தை " மூடி,மூடி " வைத்ததேயொழிய முற்றிலும் நீக்கிப் போடவில்லை. பாவங்கள் முற்றிலும் நீக்கப்படாத நிலை ஆவிக்குரிய ரீதியில் பூரணமான ஓர் நிலை அல்ல. அது முடிவான நிலைக்குத் தகுதியைத் தந்துவிடாது.

அவர்களெல்லாரும் பூரணத்தை அடையும்படியாக காக்க வைக்கப்பட்டார்கள் என்றே வசனங்களின் வழியாகத் தெரிகிறது. ஆகவே தான் 12:22-24 ஆகிய வசனங்களிலல், " *நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும்... பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்* " என்று கூறியுள்ளார். இப்பகுதி, பழைய ஏற்பாட்டு நீதிமான்களெல்லாரும் எப்பொழுது பூரணமாக்கப்பட்டார்கள் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நமக்குப் பறைசாற்றுகிறது.

## III. விசேஷித்த நன்மையானதைத் தேவன் நமக்கு நியமித்திருந்தார்

எபிரெயர் 11-ம் அதிகாரம் 39,40 ஆகிய வசனங்களிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற மற்றுமொரு உண்மை, நற்சாட்சி பெற்ற

முன்னோர்களுக்குக் கிடைக்காத ஒரு பாக்கியம் நமக்குக் கிடைத்தது என்பது.

எக்காலத்திலும் வாழ்ந்த யூதர்களுக்குள்ளாக இருந்த பெலவீனங்களில் ஒன்று தங்கள் பழம் பெருமைகளைப் பெரிதாகப் பீற்றிக் கொள்வது. அதைக் குறித்துப் பேசினால் மெய் மறந்து கேட்பது. அப்போஸ்தலர் 7-ம் அதிகாரத்தை இதற்கு ஓர் உதாரணமாகச் சொல்ல முடியும். இந்தப் பெலவீனத்தை எபிரெயர் ஆசிரியர், அவர்களின் ஆவிக்குரிய நன்மைக்காகப் பயன்படுத்த முற்படுகிறார். ஆகவே தான், யூதர்களால் பெரிதும் மதித்துப் போற்றப்பட்ட பழைய ஏற்பாட்டு பக்தர்களை ஆபேல் தொடங்கி சாமுவேல் வரைக்கும் அவர்கள் கண்களுக்கு முன்பாகக் கொண்டு வந்து எடுப்பாக நிறுத்துகிறார். அந்த விசுவாச வீரர்கள் ஒவ்வொருவரும் தங்களைக் காட்டிலும் தேர்ந்த பக்தி வாழ்க்கையை நடத்தியவர்கள் என்று இவர்களால் மிகவும் மதிக்கப்பட்டவர்கள். ஆயினும், அவர்களைக் காட்டிலும், " நீங்கள் விசேஷமானவர்கள் என்று அவர்கள் நம்ப முடியாத ஓர் உண்மையை இங்கே பகிரங்கப்படுத்துகிறார். ஏனென்றால், அவர்களெல்லாரும் நற்சாட்சி பெற்றும், " வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை " அடையவில்லை. ஆனால், நீங்கள் " வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிறிஸ்துவைப் பெற்றிருக்கிறீர்கள் ". அவர்களெல்லாரும் பக்திச் செயல்பாடுகளை நடப்பித்தும் " பூரணமடையவில்லை ". நீங்களோ கிறிஸ்துவின் உபதேசத்தாலும், இரத்தினாலும் "பூரணமாக்கப்பட்டிருக்கிறீர்கள் ". இந்தப் பாக்கியத்தைத் தேவன் அவர்களுக்கு " நியமிக்காமல் " உங்களுக்கென்று " நியமித்திருக்கிறார் " என்று கூறி விழி பிதுங்க வைக்கிறார். நன்மையும், உண்மையுமான இருதயமுள்ள எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கு இது எப்படியிருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள் !.

கிறிஸ்துவின் முதலாம் வருகைக்குப் பின்னானவர்களின் பாக்கியமான நிலை குறித்து இயேசு ஆண்டவரே சொல்லுவதைக் கவனியுங்கள். " உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான் " என்றார் (லூக்கா 8:56). வேறொரு சமயம் இயேசுவானவர் தம்முடைய சீடர்களிடம் " ....நீங்கள் காண்கிறவைகளைக் காணும் கண்கள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் ராஜாக்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும், கேளாமலும் போனார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக்கா 10:23,24). எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கு கிடைத்த இந்த சிலாக்கியத்தைத் தான் தேவன் அவர்களுக்கு நியமித்திருந்தார் என்று கூறுகிறார். இதே சிலாக்கியம் குறித்து பவுலடியார் கொரியந்தியருக்கு எழுதும் போது,

தேவன் " ஆயத்தம் பண்ணியிருந்தார் " என்று குறிப்பிட்டுள்ளார். " *எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணின வைகளைக் கண்காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை* " என்று (1 கொரி. 3:9). அநேகர் இது பரலோகத்தைக் குறிக்கும் வசனம் என்று தப்பாக எண்ணிக் கொண்டுள்ளார்கள்.

இப்படி தேவனால் " நியமிக்கப்பட்ட" , "ஆயத்தம் செய்யப்பட்ட" கிறிஸ்து, காலம் நிறைவேறின போது, ஸ்திரீயின் மூலமாக அனுப்பப்பட்டு (கலா. 4:5). எல்லாருக்காகவும் மரித்து (2 கொரி. 5:15) விசேஷித்த உடன் படிக்கைக்கு மத்தியஸ்தரானார் (எபி. 8:6). இயேசுவானவர் சிலுவையில் சிந்தின இரத்தமானது அவரை மத்தியஸ்தராகக் கொண்ட புது உடன் படிக்கையின் கீழ் வருபவர்களுக்கு எப்படி பாவமன்னிப்பை அருளு கிறதோ, அதுபோல முதலாம் உடன்படிக்கையின் காலத்தில் வாழ்ந்தவர் களின் அக்கிரமங்களையும் நிவர்த்தி செய்கிறது. இப்பேருண்மையை எபி. 9:15-ல் நாம் காண முடியும். " *ஆகையால், முதலாம் உடன் படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்தார்.....* " என்று.

இந்தப் பாக்கியமான நிலையைத்தான் எபிரெயர் ஆசிரியர் " நம்மையல்லாமல் பூரண ராகதபடி .... " என்கிறார். அதாவது, கிறிஸ்துவின் முதலாம் வருகைக்குப் பின் வாழ்ந்தவர்களுக்கு, வாழ்பவர்களுக்கு கிறிஸ்துவின் வருகை யாலும், அவர் சிந்தின இரத்தத்தாலும், அவர் கொடுத்த நற்செய்தியின் உபதேசத்தாலும் " பூரணமாகும்படியான வாய்ப்பு" உலகத்திற்குக் கிடைத்த பொழுதுதான், தேவனால் நற்சாட்சி பெற்ற அந்த விசுவாச வீரர்களும் பூரணமாக முடிந்தது என்று . அப்பப்பா, இது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் !!!.

அருமையானவர்களே, எபிரெயக் கிறிஸ்தவர்கள், தேவனால் நியமிக்கப்பட்ட விசேஷித்த நன்மையானதொன்றிற்கு எப்படிச் சொந்தக் காரர்களாக இருந்தார்களோ, அதுபோலத்தான் விசேஷித்த உடன்படிக்கை யாகிய கிறிஸ்துவால் புதிய ஏற்பாட்டின் கீழ் எபிரெயக் கிறிஸ்தவர்கள் போல் நாமெல்லாரும் இருக்கிறோம். அப்படியானால், கிறிஸ்துவை அவருடைய உபதேசத்தின்படி ஏற்று வாழ்கிறவர்களாக இருக்கிறோமா? என்றைக்காவது இந்த மேன்மையை உணர்ந்தாவது பார்த்திருக்கிறோமா? சொல்லுங்கள்.

இப்படி நமக்குக் கிடைத்த இந்த மேன்மையை அற்பமாக எண்ணாமல், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய சபையில் அங்கமாக இல்லாவிட்டால் உடனடியாகக் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்போம். ஆமென்! ⁂

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்!! பங்கு பெறுங்கள் !!!

**காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,**
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும்**
**இணைந்து நடத்தும்**

# பதினேழாம் வேதாகம கருத்தரங்கம்

# SEVENTEENTH ANNUAL BIBLE LECTURESHIP

**நாள்**

**அக்டோபர் 3,4 - 2014 (வெள்ளி, சனி)**

**(அரசு விடுமுறை நாட்கள்)**

**கருப்பொருள் – THEME**

## " கிறிஸ்தவ குடும்பம் "
## " Christian Family "

**வெள்ளி : காலை 8:45 மணி - மாலை 4:45 மணி வரை**
**சனி : காலை 8.45 மணி - மதியம் 1.00 மணி வரை**

**இடம்**

## கிறிஸ்துவின் சபை வளாகம்

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

* வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
* தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனி இடவசதி உண்டு.

*தொடர்பு முகவரி*

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

PH : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385, 98652 - 90572



# ஏன் மனந்திரும்புதல் மிகவும் அவசியமானது?

**Bro. J.C. சோட்**

மனந்திரும்புதல் ஒரு வேதாகம பாடம். இதன் பொருள், மனதை மாற்றுவது. அதாவது ஜீவிய மாற்றத்திற்கு வழிவகுக்கும் ஒரு நடை முறை. அதே நேரத்தில்,மனந்திரும்புதல் என்பது செய்யப்பட்ட தவறுக்கு வருந்துவதென்பதை விட ஒருபடி மேலான செயல். மனந்திரும்புதலில் செய்த செயலுக்குத் துக்கப்படுவது ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டிருந்தாலும், ஒருவர் தான் பிடிபட்டதினால் செய்த பாவத்திற்காக வருத்தப்பட வாய்ப்புண்டு. ஆகையால், வெறுமனே துக்கப்படுதல் போதாது. மாறாக, ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் தவறான மற்றும் கெட்ட காரியங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டு அவைகளை விட்டு விடுவதும் அவசியம். அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாகச் சொன்னார். "*தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக் கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது* " (II கொரிந்தியர் 7:10).

மனந்திரும்புதல் என்கின்ற பதத்திற்கான விளக்கத்தைக் கர்த்தர் இரண்டு குமாரர்களை உடைய ஒரு மனிதனுடைய உவமையில் சொல்லியிருக்கிறார். "*ஆயினும், உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து; மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சை தோட்டத்தில் வேலை செய் என்றான். அதற்கு அவன் மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். இளையவனிடத்தில் அவன் வந்து, அப்படியே சொன்னான்; அதற்கு அவன் போகிறேன் ஐயா என்று சொல்லியும் போகவில்லை. இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார்; அதற்கு அவர்கள் மூத்தவன் தான் என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி; " ஆயக் காரரும், வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும் நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை; ஆயக்காரரும், வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும், அவனை*

*விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை என்றார்"* (மத்தேயு 21:28-32). இங்கே, இயேசு பிரதான ஆசாரியர்களிடமும் அவருடைய நாட்களிலிருந்த மூப்பர்களிடமும் இவைகளைச் சொன்னார். இவர்கள் மத சம்மந்தமான மக்கள். ஆயினும், பக்தி காரியங்களில் தவறைச் செய்தார்கள். எனவே, இயேசு அவர்கள் மனந்திரும்பும்படி சொன்னார். அதன் பின்பு, மனந்திரும்புதல் என்றால் என்ன என்பதை உதாரணத்துடன் விளக்கினார். இங்கே இயேசு மனந்திரும்புகிற நபரை பற்றிச் சொல்லும் போது, தகப்பனிடம் முதலில் மாட்டேன் என்று சொல்லி விட்டுப் பின்பு தன் மனதை மாற்றிப் போகத் தீர்மானித்தவன் தான் என்று சொல்கிறார். வேறொரு குமாரன் போய் தன் தகப்பனுடைய திராட்சைத் தோட்டத்தில் வேலை பார்ப்பேன் என்று சொல்லியும் பின்பு போகவில்லை. கிறிஸ்து யாரிடம் இந்த உவமையைச் சொன்னாரோ அவர்களைப்பார்த்து, இவர்களுள் எந்த குமாரன் தன் தகப்பனுடைய சித்தத்தைச் செய்தான் என்று கேட்டார். அவர்கள் முதலில் போகமாட்டேன் என்று சொல்லி பின்பு போகத் தெரிந்து கொண்ட மூத்தவன் தான் என்று பதிலளித்தார்கள். கர்த்தர், ஆயக்காரரும், வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று அந்நாட்களில் வாழ்ந்த மத சம்மந்தமான மக்களிடம் சொன்னார். ஏனென் றால், ஆயக்காரரும், வேசி களும் மனந்திரும்புவார்கள். ஆனால், ஆசாரியர்களும், மூப்பர்களும் மனந்திரும்பமாட்டார்கள்.

மனந்திரும்புதல் ஏன் மிகவும் அவசியமானது? ஏனென்றால், இந்த உலகமானது பாவம், அநீதி, தேவபக்தியின்மை, ஒழுக்கக் கேடு, மாம்சத்தின் கிரியைகள் போன்றவைகளினால் நிறைந்திருக்கிறது. பாவம், மனதில் இருந்தாலும், பேச்சில் இருந்தாலும், ஒருவருடைய ஜீவியத்தில் இருந்தாலும் அது அழிவை ஏற்படுத்தும்.

பாவம் அழிவை உண்டாக்கக் கூடிய ஒன்றாக இந்த உலகத்தில் இருந்தால், யார் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும்? எதுசரி, எது தவறு என அறிந்து கொள்ளும் திறன் உடைய யாவரும் பாவம் செய்திருக்கிறபடியால், கணக்கொப்புவிக்க வேண்டிய யாவரும் மனந் திரும்ப வேண்டும் (ரோமர் 3:23). அவர்கள் தேவனுடைய பிரமாணத்தை மீறியிருக்கிறார்கள் அல்லது தேவனுடைய சித்தத்தை அசட்டை பண்ணி யிருக்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் உலகம் அக்கிரமத்தினால் நிறைந்து காணப்பட்ட போது, மனுஷனை உண்டாக்கினதற்காக தேவன் மன ஸ்தாபப்பட்டார். மனிதன் மிகவும் துன்மார்க்கமாக நடந்தபடியால் அவனை உண்டாக்கினதற்காக தேவன் வருத்தப்பட்டார். அதன் பின்பு

தேவன், நீதியுள்ள மனுஷனாகிய நோவாவிடம் ஜனங்கள் மனந்திரும்பும் படி பிரசங்கிக்கவும் அப்படி அவர்கள் மனந்திரும்பாவிட்டால் ஜலப் பிரளயத்தில் அழிந்து போவீர்கள் என்று எச்சரிக்கவும் அனுப்பினார். அவர்கள் அதைக் கேட்டுத் தங்கள் துன்மார்க்கத்திலிருந்து திரும்பி யிருந்தால் அவர்கள் தப்புவிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால், அதற்குச் செவி கொடாமல் போனபடியால், நோவா, அவருடைய மனைவி, அவர் களுடைய மூன்று குமாரர்கள் மற்றும் அவர்களுடைய மனைவிகள் தவிர மற்ற எல்லாரும் ஜலப்பிரளயத்தில் அழிந்து போனார்கள் (ஆதி. 6-8).

யோனாவின் சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கலாம். *"அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி அவர்; நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய் அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது என்றார். அப்பொழுது யோனா கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி எழுந்து யோப்பாவுக்குப்போய், தர்ஷீசுக்குப் போகிற ஒரு கப்பலைக் கண்டு, கூலி கொடுத்து, தான் கர்த்தருடைய சமூகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்"* (யோனா 1:1-3). அப்போது கடலில் பெருங்காற்று உண்டானது. கப்பற்காரர் யோனா தான் இந்நிலைக்குப் பொறுப்பாளி என தீர்மானித்து உடனடியாக அவனை தூக்கி கடலில் போட்டார்கள் என்று. தொடர்ந்து வேத வசனம் சொல்கிறது, அதன்பின்பு யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார்; அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான். கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது. தொடர்ந்து வேத வசனங்களில் நாம் இப்படியாக வாசிக்க முடியும். *" இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி, அவர்; நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய்; நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி "* என்றார். *" யோனா எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான்; நினிவே மூன்று நாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருந்தது. யோனா நகரத்தில் பிரவேசித்து, ஒரு நாள் பிரயாணம் பண்ணி; இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது, நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான். அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து உபவாசம் பண்ணும்படி கூறினார்கள்; பெரியோர் முதல் சிறியோர் மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள். இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தை விட்டு எழுந்து, தான் உடுத்தி யிருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக் கொண்டு,*

*சாம்பலிலே உட்கார்ந்தான். மேலும், ராஜா தானும், தன் பிரதானிகளும் நிர்ணயம் பண்ணின கட்டளையாக, நினிவேயிலெங்கும் மனுஷரும், மிருகங்களும், மாடுகளும், ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும், மனுஷரும், மிருகங் களும் இரட்டினால் மூடிக் கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கை களிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள். யாருக்குத் தெரியும்; நாம் அழிந்து போகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப் பட்டு, தன்னுடைய உக்கிர கோபத்தை விட்டுத் திரும்பினாலும் திரும்புவார் என்று கூறச்சொன்னான். அவர்கள் தங்கள் பொல்லாத வழியை விட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்"* (யோனா 3 ஆம் அதிகாரம்). இங்கே, யோனா கர்த்தரை விட்டு ஓடிப்போவதிலிருந்தும், தனக்கு கொடுக் கப்பட்ட பொறுப்பைத் தட்டிக் கழிப்பதிலிருந்தும் மனந்திரும்பியதைக் காணலாம். தேவகட்டளைப்படி துன்மார்க்கமான மகா பெரிய நகரமாகிய நினிவேக்குச் சென்று பிரசங்கித்தபோது அந்த பட்டணத்தார் மனந்திரும்பி, தங்கள் பாவத்தை விட்டுத் திரும்பினார்கள். கடைசியாக, தேவன் நினிவே பட்டணத்தை அழிக்கலாமென்ற தன் மனதை மாற்றி, அந்தப் பட்டணத் தார் மனந்திரும்ப முன்வந்தபடியால் அவர்களைத் தப்புவித்தார். தேவனு டைய வார்த்தை அறிவிக்கப்பட்ட போது அது மனந்திரும்புதலை உண்டாக்கினது. இது சம்மந்தப்பட்டவர்களைத் தேவன் தப்புவிக்க வழி வகுத்தது. ஆனால், அங்கே மனந்திரும்புதல் ஏற்படாமல் இருந்திருந்தால் அவைகள் எல்லாம் அழிந்து போயிருக்கும்.

மத்தேயு 3:1-3 வசனங்களில், யோவான் ஸ்நானகன், மனந் திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கித்ததை நாம் வாசிக்கிறோம். கிறிஸ்து தன்னுடைய நாட்களில் வாழ்ந்த ஜனங்க ளிடத்தில் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள் என்று எச்சரித்தார் (லூக்கா 13:3). பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேம் பட்டணத்தில் திரளான மக்களிடத்தில் பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் பிரசங்கம் பண்ணினார்கள். அந்தக் கூட்டத்தில் கிறிஸ்துவை சிலுவையிலறைந்தவர்களும் இருந்தார்கள். அவர்கள் தாங்கள் கேட்ட காரியங்களைக் குறித்து தங்கள் இருதயங்களில் குத்தப் பட்டார்கள்; அதாவது, அவர்கள் விசுவாசிகளாகி, என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்ள விரும்பினார்கள். *" பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்,*

*அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் "* என்றார் (அப். 2:38).

அப்போஸ்தலர். 17:30-ல் நாம் இப்படியாக வாசிக்கிறோம், *"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லா ருக்கும் கட்டளையிடுகிறார் "*. இங்கே, இவர் சொல்கிறது என்னவென்றால், ஒரு காலகட்டத்தில் தேவன் சில குறிப்பிட்ட காரியங்களைக் கண்டு கொள்ளாமல் இருந்திருக்கலாம் அல்லது சில காரியங்களைச் சகித்திருக்க லாம், ஆனால், இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் ". பின்பு 17:31ல் லூக்கா சொல்லும் போது, *" மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார்"*. எனவே, அவரைச் சந்திக்க ஆயத்தமாக வேண்டுமென்றால், நாம் மனந்திரும்பி கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டிருக்கிற யாவையும் செய்தால் இந்த உலகத்திலும், இனி வரும் உலகத்திலும் இரட்சிக்கப்படுவோம்.

வழிவிலகிச் செல்கிற அல்லது பாவம் செய்கிற கிறிஸ்தவனின் நிலை என்ன? பாவமானது அவனிடமிருந்து கர்த்தருடைய முகத்தை மறைத்து விட்டது (I பேதுரு 3:12). பாவத்தில் மீண்டும் விழுந்து விட்ட ஒரு கிறிஸ்தவனின் பாவம் நீக்கப்பட வேண்டும், அல்லது மன்னிக்கப்பட வேண்டுமென்றால், அதற்கான ஒரே வழி அப்படிப்பாவம் செய்தவன் பாவத்திலிருந்து மனந்திரும்பி, அறிக்கையிட்டு, பிதாவினிடத்தில் மன்னிப்பு கேட்பதுதான். (அப். 8:14,25; யாக்கோபு 5:16).

இப்போது உங்களைப் பற்றி எப்படி? உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பிவிட்டீர்களா? இது உங்கள் நன்மைக்கானது என்பதை உணருங்கள். கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, உங்கள் பாவங்களி லிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்று, தேவனுக்குக் கீழ்ப்படியும் போது உங்களால் நல்ல தேவ பக்தியுள்ள வாழ்க்கையை நடத்த முடியும், அப்போது நீங்கள் மாற்றமடைந்த நபராக இருப்பீர்கள். இவைகளையெல்லாம் செய்து முடிக்கும் போது உங்களைச் சுற்றியிருக்கிறவைகள் நன்மைக்காக மாறத் தொடங்கும். இப்பொழுது சொல்லப்பட்டவைகளின்படி காரியங்கள் நடக்கிறதா என்று முயற்சி செய்து பாருங்கள்.

பெண்கள் பகுதி

# " இயேசுவின் காலத்தில் உண்மையாய் தொண்டாற்றிய நிலை " எவ்வாறு பார்க்கப்படுகிறது?

**Sis. R. R. NAYAGAM**

லூக்கா எழுதின நற்செய்தி நூல் 8:1,2 ஆகிய வசனங்களில், இயேசு பட்டணங்கள் தோறும், கிராமங்கள் தோறும் பிரயாணம் பண்ணினார் என்று பார்க்கிறோம். தனக்குச் சொந்தம் என்று சொல்வதற்கு அவருக்கு எந்த வீடும் இல்லை என்பது நமக்குத் தெரியும். இயேசுவோடு கூட பிரயாணம் பண்ண ஒரு கும்பல் இருக்கவே செய்தது. அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட சீஷர்கள் தங்கள் தொழில்களை விட்டு அவருக்குப் பின் சென்றார்கள். வசனம் 2-ல் பார்க்கும் போது சில ஸ்திரீகளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ் செய்து கொண்டு வந்த மற்ற அநேக ஸ்திரீகளும் அவருடேன இருந்தார்கள். அவர்களுள் ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனா என்னப்பட்ட மரியாளும் ஒருவள். இயேசுவோடு கூட இருந்ததற்கு *மகதலேனா மரியாளுக்கு* சரியான காரணம் இருந்தது.

மேலும், யோவான் 19:25-ல் இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்று கொண்டிருந்தார்கள் என்று வாசிக்கிறோம். இயேசு பேசின கடைசி வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அங்கு நிற்பது அவள் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியதாக இருந்திருந்தாலும், தைரியமாக அங்கு நின்றாள். மேலும், அந்த மகா நாளில் அரிமத்தியா ஊர் யோசேப்பின் விசுவாசமும் நினைவு கூரத் தக்கது. யோவான் 19:18. யூதர்களுக்குப் பயந்து போய் கூட இவன் இருந் திருக்கலாம். ஆனால், அதைப் பொருட்படுத்தாமல் எப்படியாவது இயேசுவை அடக்கம் செய்ய முறையான இடம் தேவை என்பதில் உறுதி யாயிருந்தான். யாரோ ஒருவர் இதைச் செய்யட்டும் என்று நினைக்காமல் தானாகவே பிலாத்துவிடம் சென்று உடலை கேட்டு விடுகிறான். பிலாத்து அனுமதி கொடுத்தவுடன் இயேசுவின் சரீரத்தைப் பெற்றுக் கொள்கிறான்.

அடுத்ததாக, யோவான் 19:39-ல் நிக்கொதேமுவின் செயல் பாட்டைப் பார்க்கிறோம். முதன் முதல் இயேசுவை, ஒரு ராத்திரியில் சந்தித்தவன். இயேசுவின் உடலை அடக்கம் செய்வதற்காக வெள்ளைப் போளமும், கரிய போளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டு வந்தான். இயேசுவின் சரீரத்தை எடுத்து யூதர்கள் அடக்கம் பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்த வர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக் கட்டினார்கள்.

பெண்களும் இவர்களுடன் கல்லறைக்குச் சென்றார்கள் (லூக்கா 23:55). சென்று இயேசுவை அடக்கம் செய்த இடத்தைப் பார்த்தார்கள்.

வாரத்தின் முதல் நாள் அதிகாலையில் மகதலேனா மரியாளும் மற்ற ஸ்திரீகளும் சூரியன் உதயமாகிறபோது கல்லறையினிடத்திற்கு வந்தார்கள். முந்தின நாள் ஓய்வு நாளாய் இருந்தபடியால் கந்த வர்க்கங் களையும், பரிமள தைலங்களையும் ஆயத்தம் பண்ணி, கற்பனையின் படியே ஓய்வு நாளில் ஓய்ந்திருந்தார்கள். என்னே அவர்களுடைய விசுவாசம்! இயேசு தங்களோடு இப்போது இல்லை. ஆனாலும், கற்பனையைக் கைக்கொள்வதின் அவசியத்தை அவர் கற்றுக் கொடுத்த படியே கைக்கொண்டார்கள். எப்போது விடியும் என்று காத்திருந்து விடிந்தவுடனே ஓடோடிச் சென்றதற்குக் காரணம் அவர்களுக்கிருந்த விசுவாசம். ஓய்வு நாளுக்கு முந்தின நாள் இயேசுவுக்கு நேரிட்ட சகல கொடுமைகளையும் பார்த்து உடைந்து போன உள்ளத்துடன், இனி என்ன நடக்குமோ? எதிர்காலம் எப்படி இருக்குமோ? எப்படித்தான் காலத்தைக் கடத்துவது என்றெல்லாம் நினைத்து இடிந்து போயிருந்திருப்பார்கள் இந்த ஸ்திரீகள்.

ஒருவேளை இந்த ஸ்திரீகள் நினைத்திருந்தால் எந்த ஒரு முயற்சியும் இன்றி கல்லறையின் பக்கமே போகாமல் இருந்திருக்கலாம். பூமியில் இன்னும் இராஜ்ஜியமும் ஏற்படுத்தப்படவில்லை. இயேசுவோடு இருந்ததின் காரணமாக அவர்கள் கைது செய்யப்படலாம், அடிக்கப்படலாம், ஏன் கொலையும் கூட செய்யப்படலாம். ஏமாற்றமும், தைரியத்தை இழந்து, குழப்பமான நிலையும் தான் அன்றைக்கு அவர்களிடத்தில் இருந் திருக்கும். எனவே, வீட்டைப் பூட்டி உள்ளே படுத்துக் கிடந்திருக்கலாம்.

ஆனால், மகதலேனா மரியாள் சரியாகச் செயல்பட்டாள். இயேசுவின் சரீரத்தைப் பாதுகாக்கத் தேவையான வாசனைத் திரவியங்களைத் தயார் செய்தாள். தன்னோடு யார் இருக்கிறார்களோ, இல்லையோ, எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. உடனே கல்லறையிடத்திற்குப் போகிறாள். அவள் நம்பிக்கை அவளைச் செயல்பட வைத்தது. கல்லறையை அடைத்துப் போட்டிருந்த கல் எடுத்துப் போடப்பட்டிருந்தது. பூமி மிகவும் அதிரும்படி கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து வாசலி லிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி அதன்மேல் உட்கார்ந்தான். காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள் (மத். 28:2,3,4).

மகதலேனா மரியாள் இயேசு உயிர்த்தெழுந்தார் அவர் கல்லறையில் இல்லை என்ற செய்தியை பேதுருவிடமும், யோவானிடமும் தெரிவிக்க ஓடினாள் (யோவான் 20:1-18). பேதுருவும், யோவானும் வந்து பார்த்து விட்டுத் திரும்பப் போய் விட்டார்கள். ஆனால், மரியாளோ

கல்லறையினருகே வெளியில் நின்று அழுது கொண்டிருந்தாள். இரண்டு தூதர்கள் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள். 15ம் வசனத்தில் மரியாள் உயிரோடெழுந்த இயேசுவைப் பார்த்தாள். ஆனால், அவரைத் தோட்டக்காரன் என்று நினைத்துக் கொண்டாள். தைரியமாக அவரிடம் இயேசுவின் உடலைப் பற்றி விசாரிக்கிறாள். நான் போய் அவரை எடுத்துக் கொள்வேன் என்கிறாள். பின்பு இயேசு மரியாளே என்று கூப்பிட்டுத் தன்னை வெளிப்படுத்துகிறார். ஆயினும், தன்னைத் தொடாதே என்று கூறிவிட்டார்.

அப்போஸ்தலர்களைக் காட்டிலும் இவள் தான் இயேசுவை முதன் முதலாகப் பார்த்தாள். மாற்கு ஆசிரியர், ஏழு பிசாசுகளை அவளிடத்தி லிருந்து துரத்தியிருந்தார் என்று கூறியுள்ளார். முதல் முதல் மகதலேனா மரியாளுக்குத் தரிசனமானார் என்று (16:9,10) கூறுகிறார். அருமையான வர்களே, பெண்களைக் குறித்து இயேசு எப்படி எண்ணங் கொண்டி ருந்தார் என்பதை நினைக்கும் போது எவ்வளவு ஆறுதலாக உள்ளது. நமக்கெல்லாம் ஒரு மிகச் சிறந்த விசுவாசத்தையும், நம்பிக்கையையும் நமக்குக் கொடுப்பதற்கு மிகப் பெரிய உதாரணம் இது.

தூதன் மரியாளிடம் இந்த சங்கதிகளையெல்லாம் சீஷரிடத்திலும், பேதுருவிடத்திலும் தெரிவிக்கும்படி மரியாளிடம் கூறுகிறார். மூன்று முறை பேதுரு இயேசுவை மறுதலித்தும், பேதுரு சீஷர்களில் ஒருவராகத்தான் கருதப்படுகிறான். பேதுரு மீண்டும் தன் கூட்டத்தோடு ஒருவனாகிறான். நம்முடைய தவறுகளை ஒத்துக்கொண்டு இயேசுவிடம் வரும்போது, இயேசு மீண்டும் நம்மைச் சேர்த்துக் கொள்கிறார். பேதுரு அப். 2ம் அதிகாரத்தில் முதல் பிரசங்கத்தைச் செய்தார் என்பது நமக்குத் தெரியும். பேதுரு இயேசுவை அந்த அளவு நேசித்திருந்தான்.

யோவான் 20:16,17-ல் இயேசு தாமே மரியாளைப் பெயர் சொல்லி அழைக்கிறார். உடனே அவள் அவரை அறிந்து கொண்டு "ரபூனி" என்கிறாள். அதற்குப் "போதகரே" என்று அர்த்தம். மேலும் ஏன் தன்னைத் தொடக் கூடாது என்பதற்கான விளக்கத்தையும் இயேசு மரியாளிடம் கூறுகிறார்.

இயேசு உயிர்ந்தெழுந்தார் என்ற நல்ல செய்தியை சீஷர்களுக்கு முதலில் போய் கூறும் சிலாக்கியம் மரியாளுக்குக் கிடைத்தது. அதை விட உயிர்ந்தெழுந்த இயேசுவை முதன் முதல் தரிசிக்கும் மகா சிலாக்கியமும் இவளுக்குக் கிடைத்தது. காரணம், இயேசுவின் மேல் வைத்த நம்பிக்கை. இயேசு உயிரோடு இருந்து ஊழியம் செய்த நாட்களில் சொன்ன வார்த்தை களின் மேல் வைத்த விசுவாசம். தன்னிடம் இருந்த ஏழு பிசாசுகளைத் துரத்தியிருக்கிறார் என்று நினைக்கும் போது அவர் மேல் எழும் அளவுக்கதிகமான அன்பு. இவைகள் தான் இவளை இப்படிச் செயல்பட வைத்ததேயல்லாமல் வேறல்ல.

" இயேசுவின் இரத்தத்தினால் நாமெல்லாரும் எத்தனை பிசாசின் குணாங்கள் போகக் கழுவப்பட்டிருக்கிறோம் ". பாவ மன்னிப்புப் பெற்ற நமக்கு இயேசுவின் மேல் எந்தளவு அன்பு உள்ளது? அவர் எழுதிக் கொடுத்திருக்கும் வார்த்தைகளை கையில் வைத்திருக்கிறோமே! அதில் எந்த அளவு நம்பிக்கை வைத்துள்ளோம்? சோதித்துப் பார்ப்போம் நம்மை. மகதலேனா மரியாள், யோசேப்பு, நிக்கோதேமு போன்றவர்கள் செயல்பட்டதற்குக் காரணம் இயேசுவின் மேல் இருந்த நம்பிக்கை. நம்பிக்கைக்கும் மேலாக இயேசுவின் மேல் வைத்திருந்த அன்பு. அன்பு இருந்தால் விசுவாசம் வரும். இரண்டும் இருந்தால் செயல்பாடு இருக்கும். இவர்கள் போல் வாழ முயற்சி எடுப்போம். மறுமையில் இயேசுவை தரிசிப்போம். ஆமென்!

# வேதாகமமும், செல்போனும்

நாம் செல்போனை எப்படிப் பயன்படுத்துகிறோமோ அதேபோல் வேதாகமத்தை பயன்படுத்தினால் என்ன நடக்கும் என்று எப்போதாவது யோசித்துப் பார்த்ததுண்டா?

அதை நம் பர்சிலோ அல்லது பாக்கெட்டிலோ எடுத்துக் கொண்டு போனால் என்ன நடக்கும்? அதை ஒரு நாளில் பலதடவைகள் புரட்டிப் பார்த்தால் என்ன நடக்கும்? அதை நாம் மறந்துவிட்டு திரும்பிப் பார்த்தால் என்ன நடக்கும்? அதை வசனங்களை பெற்றுக் கொள்வதற்காக பயன் படுத்தினால் என்ன நடக்கும்? அதில்லாமல் நம்மால் வாழ முடியாது என்று எண்ணினால் என்ன நடக்கும்? அதை சிறுபிள்ளைகளுக்கு பரிசாக கொடுத்தால் என்ன நடக்கும்? நாம் பயணிக்கும் போது அதைப் பயன் படுத்தினால் என்ன நடக்கும்? அவசரக் காலத்தில் அதைப் பயன் படுத்தினால் என்ன நடக்கும்?

மேற்சொல்லப்பட்டவைகள் உங்களை ஆச்சரியப்பட வைத்து என் வேதாகமம் எங்கே? என்று உங்களை கேட்கவைக்கிறதா?

ஓ, இன்னொரு விஷயம்..... இது, உங்கள் செல்போனைப் போல் அல்லாமல் நாம் வேதாகமத்தைப் பயன்படுத்துவதற்கு கட்டணம் எதுவும் செலுத்த வேண்டிய அவசியமில்லை. அதனால், சேவை துண்டிக்கப்பட்டு விடுமோ என்று கவலைப்பட வேண்டிய அவசியமுமில்லை. ஏனென்றால், இயேசு கிறிஸ்து நமக்காக ஒரே தரம் கிரயத்தைச் செலுத்திவிட்டார்.

இது உங்களை நிற்க வைத்து " நான் எதை முதன்மைப்படுத்து கிறேன் " என்று சிந்திக்க வைக்கிறதா?

அருமையானவர்களே! வேதாகமத்தில் துண்டிக்கப்பட்ட அழைப்புகள் எதுவும் கிடையாது.

வாலிபர் பகுதி

# வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறீர்கள்

சகோ. பர்னபாஸ்

**வா**லிப பிராயத்திலே கர்த்தரை சேவிக்கிற ஒவ்வொரு வாலிப உள்ளங்களுக்கு தன் வாலிப வயதில் தன்னையே ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே வாழ்த்துக்கள். ஒரு மனிதன் பிறந்தது முதல் அவன் மரிக்கிற வரைக்கும் அவனுடைய ஒவ்வொரு பருவத்திலும் அவன் எப்படி வாழ்ந்தால் நித்திய ஜீவனை பெறலாம் என்று திட்டமாக போதிப்பது நம்முடைய பரிசுத்த வேதாகமம் மட்டுமே. இப்படிப் போதிக்கிற வேதாகமம் வாலிபப் பருவத்தைக் குறித்து எச்சரித்தும் அந்த பருவத்தில் எப்படி நடந்தால் தன்னைக் காத்துக் கொள்ள முடியும் என்பதையும் போதிக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் உலகமானது அறிவியல் ரீதியில் நவீன யுகமாக மாறி இருப்பதால், வாலிபர்களுடைய பாவங்களும் இன்றைக்கு நவீனமாகவே மாறி இருக்கிறது. வாலிபர்களும் இன்றைக்குத் தங்களை சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்து பாவ சந்தோஷங்களை மனநிறைவோடு செய்துகொண்டு இருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம் என்றால் கர்த்தரைப் பற்றும் பயம் இல்லாததுதான்.

அநேக வாலிபர்கள் நான் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனைக்கு ஒழுங்காக தான் செல்கிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால், மற்ற நாட்களில் கர்த்தரை நினைக்காமல் தங்கள் பாவ வாழ்க்கையை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால் கர்த்தரைப் பற்றும் பயம் இல்லாததுதான். இதனால் தான் நீதி மொழிகள் ஆசிரியர், " நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு " (நீதி.25:17) என்று எச்சரிக்கையோடு எழுதுகிறார். நாம் ஏன் நாள்தோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடு இருக்க வேண்டும் என்று இக்கட்டுரையின் மூலம் கற்றுக்கொள்வோம்.

## 1. பொல்லாத உலகமாக இருக்கிறது

இந்த உலகத்தில் தற்போது ஏற்பட்டு இருக்கிற அறிவியல் முன்னேற்றத்தால் நாம் சௌரியமாக வாழ்ந்தாலும் இந்த உலகம் இன்னமும் இருளின் அதிகாரத்தில் (கொலோ. 1:13) இருக்கிறது என்று நம்முடைய வேதாகமம் போதிக்கிறது. அதோடு மாத்திரம் அல்ல, மனுஷருடைய கிரியைகளும், பொல்லாதவைகளாக இருக்கிறது (யோவான் 3:19) என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் எச்சரித்துள்ளார்.

ஆகையால், வாலிபர்களே இந்த உலகத்தில் பாவத்தோடும், பொல்லாங்கனாகிய பிசாசோடும் நமக்குப் போராட்டங்கள் இருக்கிறது. அவனை நாம் ஜெபிக்க வேண்டும். மேலும் வசனம் பிசாசானவன் எவனை விழுங்கலாமோவென்று கெர்ச்சிக்கிற சிங்கம் போல சுற்றித் திரிகிறான் (1 பேது 5:8) என்கிறது. ஆனால், வாலிபர்களாகிய நாம் கவனிக்க வேண்டிய விசயம் என்னவென்றால் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தில் வாழ்ந்த வாலிபர்கள் பொல்லாங்கனாகிய சாத்தானை ஜெயித்திருக்கிறார்கள் யோவான் ஆசிரியர் எழுதுவதைக் கவனியுங்கள். வாலிபரே பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன் (1 யோவா 2:13) என்கிறார். அருமையான வாலிபர்களே முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தில் வாழ்ந்த வாலிபர்களே பொல்லாங் கனை ஜெயித்திருக்கிறார்கள் என்றால் நாம் ஏன் ஜெயிக்க முடியாது.

மேலும் யோவான் ஆசிரியர் வாலிபர்களைப் பார்த்து வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன் (1 யோவா 2:14) என்கிறார் பாருங்கள். அவர்கள் சாத்தானை எதிர்த்து ஜெயித்து பலவான்களாக மாறியிருக்கிறார்கள். அவர்களால் சாத்தானை எதிர்த்து ஜெயித்து பலவான்களாக மாற முடியும் என்றால் நம்மால் ஏன் முடியாது, நாம் சாத்தானை ஜெயிக்க வேண்டுமென்றால் நாள்தோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிருக்க வேண்டும் ( நீதி. 23:17) அதைக் குறித்து நாம் சற்று விரிவாகப் பார்ப்போம்.

## 2. நமக்குள் இருக்க கூடிய பயம்

அநேக வாலிபர்களுக்கு இருக்க கூடிய பிரச்சனை தங்களுக் குள்ளாகவே எல்லா விசயத்திலும் பயந்து கொண்டு இருப்பது தான். அதாவது, தங்களுக்குள் இருக்கக் கூடிய தாழ்வு மனப்பான்மையின் காரணமாகப் பயப்படுவது, தங்களுக்கள் திறமை இல்லையோ, அழகு இல்லையோ என்ற மனப்பான்மையை வைத்துக்கொண்டு பிறரிடத்தில் பேசுவதற்கே பயப்படுவார்கள் அதில் மற்றொரு வகை என்னவென்றால் தவறு அல்லது பாவம் செய்கின்றபோது அதினிமித்தமாக பயப்படுவது, ஆதாம் பாவம் செய்த போது அவன் பயந்து ஒளித்துக் கொண்டான் (ஆதி. 3:10) என்று வேத வசனம் கூறுகிறது.

இயேசு கிறிஸ்து கடலில் தண்ணீர் மீது நடந்தபோது பேதுரு பார்த்து, தானும் நடக்க வேண்டும் என்று விருப்பப்பட்டு இயேசு கிறிஸ்துவின் அனுமதியோடு கடலில் நடந்தபோது திடீரென கடலுக்குள் அமிழ்ந்து போனான். என்னவென்று நாம் பார்க்கின்றபோது வசனம் சொல்லுகிறது, பேதுரு பயந்து அமிழ்ந்து போனான் (மத். 14:30) என்கிறது. ஆகையால் நமக்குள் பயம் வருகிறது என்றால் நாம் பாவம் செய்திருப்போம் அல்லது அவிசுவாசிகளாக இருப்போம்.

ஆகையால், வாலிபர்களே நமக்குள் இருக்க கூடிய பயத்தை நாம் விராட்டியடிக்க வேண்டும் தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியை கொடாமல் பலமுள்ள ஆவியைக் கொடுத்து இருக்கிறார் (2 தீமோ. 1:7) ஆகையால், நாம் பலமுள்ளவர்களாக இருப்போம்.

### 3. மற்றவர்கள் மேல் இருக்க கூடிய பயம்

நமக்கு இருக்கக் கூடிய மற்றொரு பிரச்சனை மற்றவர்களைப் பார்த்து பயப்படுவது. அதாவது மற்றவர்களைப் பார்த்தோ அல்லது அவர்களுடைய திறமையைப் பார்த்தோ அவர்களிடத்தில் பேசுவதற்கே பயப்படுவது. இதற்குக் காரணம் நமக்குள் இருக்கக் கூடிய தாழ்வு மனப்பான்மைதான்.

இப்படிப்பட்ட பயம் இருக்கக் கூடியவாலிபர்கள் தங்களுடைய வாழ்க்கையிலும் கிறிஸ்தவ ஜீவயத்திலும் முன்னேற்றம் காண்பது என்பது முடியாத காரியம் ஆகும். அநேக வாலிபர்களுக்கு சபையில் நடத்துனர் பகுதியோ அல்லது ஜெபமோ, வேத வாசிப்பின் பகுதியோ கொடுக்கும்போது ஒன்றும் எங்களால் முடியாது என்பார்கள் அல்லது சபைக்கு முன்னால் பேசுகின்ற போது நடுக்கத்தோடு உளற ஆரம்பித்து விடுவார்கள்.

இதற்கெல்லாம் என்ன காரணம் மற்றவர்கள் மீது இருக்க கூடிய பயம் தான். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து விடுதலையாகி செங்கடலுக்கு முன்பாக இருக்கும்போது எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு மிகவும் பயந்தார்கள் (யாத். 14:16) என்கிறது. இதற்கு என்ன காரணம்? கர்த்தரிடத்தில் பயம் இல்லாமல் போனதுதான் இப்படியாக அநேக உதாரணங்களை நம்முடைய வேதாகமம் சொல்லிக் கொண்டே போகிறது. நமக்கு நாமே பயப்படுவதும் பிறரிடத்தில் தேவையில்லாமல் பயப்படுவதும் கோழைத்தனமானது. யோவான் எழுதின வெளிப் படுத்தின விசேஷத்தில் பயப்படுகிறவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்ற எச்சரிக்கையோடு எழுதுகிறார்.

### 4. கர்த்தர் மேல் இருக்கக் கூடிய பயம்

வாலிபர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் பயம் இருக்க வேண்டும். அது யார் மீது என்றால் நம்முடைய கர்த்தரின் மீது தான், அவருக்குப் பயந்தால் தான் நம்முடைய வாழ்க்கை ஆசீர்வாதமாக இருக்கும். நீதிமொழிகள் ஆசிரியர் எழுதும் போது கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று (நீதி.14:27) என்று எழுதுகிறார்.

மேலும் அந்த ஆசிரியர் எழுதும் போது நாம் கர்த்தருக்குப் பயப் படுகிறபோது நமக்குள் திட நம்பிக்கை உண்டாகிறது. (நீதி. 14:26) என்றும் எழுதுகிறார். ஆகையால், அருமையான வாலிபர்களே நாம் ஒவ்வொரு நாளும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிருக்கவேண்டும் (நீதி. 23:17)

தானியேல் தீர்க்கதரிசனப் புத்தகத்தில் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்கிற வாலிபர்கள் நேபுகாத்நேச்சாரின் கட்டளைக்கு பயப்படாமல் அக்கினிக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கவும் ஆயத்தமாயிருந்தார்கள் என்பதை நாம் மறுக்க இயலாது. (தானியேல் 3:18).

இந்த வாலிபர்களின் விசுவாசம் மகத்தானது ஆகும். தேவன் எங்களை அக்கினிச் சூளையிலிருந்து விடுவிக்காமற்போனாலும், நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை (தானி. 3:18) என்று தைரியத்தோடு சொன்னார்கள். இதற்கு என்ன காரணம் அவர்கள் ராஜாவுக்குப் பயப்படாமல் கர்த்தருக்கே அதிகமாக பயத்திருக்கிறார்கள். மேலும், இயேசு கிறிஸ்து சொல்வதையும் இங்கு நாம் கவனிக்க வேண்டும். சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்கவல்ல வருக்கே பயப்படுங்கள் (மத். 10:28) என்று அறிவுறுத்துகிறார்.

ஆகையால் , கிறிஸ்துவுக்கு பிரியமான வாலிபர்களே உங்களுக்குள் இருக்க கூடிய பயத்தையும் நீங்கள் முழுவதுமாக விட்டு, உங்களை உண்டாக்கி இரட்சித்த நம்முடைய கர்த்தருக்கே நீங்கள் அனுதினமும் பயந்து நடங்கள், சாத்தானை ஜெயித்து பலவான்களாக இருங்கள் தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்!.

# நாளும், நடப்பும்

1. ஜம்மு - காஷ்மீர் வெள்ளம் : 2 லட்சம் பேர் பத்திரமாக மீட்பு, ரூ. 6,000 கோடி சேதம், மழையால் நிவாரணப் பணிகள் பாதிப்பு - மாநில அரசு.
2. சிறார் திருமணம் : இரண்டாவது இடத்தில் இந்தியா - ஐ.நா. அறிக்கை
3. அக்கினி-1 ஏவுகணை சோதனை வெற்றி
4. எபோலா நோயால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 4,784, உயிரிழந்தோர் எண்ணிக்கை 2,400 - உலக சுகாதார அமைப்பு
5. தென்கொரியாவின் இன்சியானில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், இந்தியாவிலிருந்து 679 பேர் பங்கேற்பு - மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர்

சிறுவர் பகுதி

# ஆத்துமா

**Bro. ABEL R. NAYAGAM**

அன்பு குழந்தைகளே! உங்களுக்கு நம் உடலின் மேன்மை பற்றி கொஞ்சம் கற்றுக் கொடுக்கலாம் என்று இப்பாடத்தை உங்கள் முன் வைக்கிறேன்.

எப்பொழுது ஒரு மனிதன் தன் ஆத்துமாவைப் பெற்றுக் கொள்கிறான்? வேதாகமத்தில் யாக்கோபு என்ற ஆசிரியர் மூலமாக .... ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது (யாக். 2:26) என்று வாசித்து அறிந்து கொள்கிறோம். அதாவது, ஆவி இல்லையென்றால், இந்த சரீரம் உயிர் வாழ முடியாது.

எப்பொழுது ஓர் உயிர் உண்டாகிறது? இதற்கு பதில் மிகவும் எளிமையானது. கருவில் ஒரு உயிர் உருவாகிறது. ஓர் உயிர் கருவில் உண்டானவுடன் அது உயிர் பெற்று விடுகிறது. அதாவது, வாழ ஆரம்பித்து விடுகிறது. விஞ்ஞான உண்மைகளை வைத்து கருவில் உள்ள உயிர் உயிருடன் இருக்கிறதா என்று கண்டு கொள்ளலாம்.

சில உண்மைகளை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

1. கரு உருவாகி மூன்றாம் வாரத்தில் குழந்தையின் இருதயம் உருவாகி 21,22-ம் நாளில் இருந்து இதயம் சுருங்கி விரிய ஆரம்பித்து விடுகிறது. 22,23ம் நாளில் இருந்து நரம்புக் குழாய் வளர ஆரம்பிக்கிறது.
2. இரண்டு மாதத்தில், இதயம் நன்றாக துடிக்க ஆரம்பித்து மருத்துவர்கள் ஸ்டெதஸ்கோப்பில் கேட்கும் அளவு துடிக்கிறது. 5ம் வாரத்தின் இறுதியில் இதய அறைகள் பிரிக்கப்பட்டு விடுகிறது.
3. கருத்தரித்து 40ம் நாளில் மூளையின் செயல்பாடு ஆரம்பிக்கப்பட்டு மின்சார அலைகள் மூளையில் பதிவு செய்யப்படுகிறது.
4. 26-27 ஆகிய நாட்காலத்தில் சுவாச மண்டலம் உருவாக்கப்படுகிறது. அதாவது, தொண்டைக் குழாய், மூச்சுக் குழாய், காற்றறைகள், நுரையீரல் போன்றவை உண்டாகிறது.
5. நான்காம் வாரத்தின் ஆரம்பத்தில் கல்லீரல், கணையம், பித்த நீர்பை போன்றவை உருவாகிறது.
6. இரண்டு மாத காலத்தில் கரு முழு வளர்ச்சியடைந்து அந்தந்த உறுப்புக்கள் அந்தந்த இடத்தில் உருவாகி விடுகிறது (பாதம்,

கை, தலை, உறுப்புக்கள், முதலியன). கை விரல்கள் கூட உருவாகி விடுகிறது. ஒரு அங்குலத்திற்கு குறைவான நீளமாக இருக்கும்போதே கருவானது தலை, கண், காது, சிறிய உணவு மண்டலம், சிறுநீரகம், கல்லீரல், துடிப்புள்ள இதயம், இரத்த மண்டலம், மூளை வளர்ச்சி இவைகளைப் பெற்றுவிடுகிறது.

7. குழந்தை பிறக்கும் முன் வயிற்றில் இருக்கும்போதே துள்ளுகிறது, பெருவிரலை சப்புகிறது, தூங்குகிறது, தூங்கி எழுகிறது.

8. தொடு உணர்வு, வலி, குளிர், ஒலி, ஒளி இவைகளை உணர்கிறது பிறக்கும் முன்பே.

9. இத்தனை குணங்களையும் உடைய ஒரு குழந்தை உயிருடன் தான் இருக்கிறதா? கட்டாயமாக. இத்தனை அதிசயங்களை செய்து கொண்டிருக்கும் ஒரு கரு கட்டாயமாக உயிருடன் தான் இருக்கிறது.

பிறக்காததற்கு முன்பே இருக்கும் இக்கருவைப் பற்றி தேவன் என்ன நினைக்கிறார்? அவருடைய பார்வை எப்படியிருக்கிறதென்று பார்ப்போம் வாருங்கள்!!

"*நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசி யாகக் கட்டளையிட்டேன்* " என்று சொன்னார் (எரேமியா 1:5) பிறக்காத தற்கு முன்னே தேவன் அக்குழந்தையை ஒரு தீர்க்கதரிசியாகக் கண்டு அதைப் பரிசுத்தம் பண்ணியிருக்கிறார். ஒருவேளை அவன் தாய் அக்கருவை சிதைத்திருப்பாள் என்று சொன்னால், அவள் ஒரு தீர்க்க தரிசியை கொன்றிருக்கிறாள் என்று தான் பொருள். தேவன் ஒருவனை உயிருள்ளவனாகப் பார்க்கையில் அதைக் கொன்ற பாவத்துக்கு ஆளாயிருந்திருப்பாள்.

இதே உண்மை ஏசாயா தீர்க்கதரிசியின் வாழ்க்கைக்கும் பொருந்தும். "..... தாயின் கர்ப்பத்திலிருந்தது முதல் கர்த்தர் என்னை அழைத்து, நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தினார் ..... நான் தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் கர்த்தர் தமக்குத் தாசனாக என்னை உருவாக்கினார் " (ஏசாயா 49:1,5).

இதையே தாவீது சொல்லும் போது மிகத்தெளிவாக கர்ப்பத்தில் இருக்கும் கருவைப்பற்றி அதற்கு உயிர் இருக்கிறது என்று சொல்லியிருக் கிறார். என் தாயின் கர்ப்பத்தில் என்னை காப்பாற்றினீர். நான் பிரமிக்கத் தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டேன். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக் கப்பட்டேன். பூமியின் தாழ்விடங்களில் விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டேன். என் கருவை உம்முடைய கண்கள் கண்டது. என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புத்தகத்தில் எழுதியிருந்தது. (சங். 139:13-16).

வேதாகமம் தெளிவாகச் சொல்லுகிறது ஒரு உயிர் தன் தாயின் வயிற்றில் இருக்கும்போதே உயிர் பெற்று விடுகிறது. எனவே, யாக்கோபு ஆசிரியர் சொன்ன ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கும் என்ற வசனத்தின்படி ஆவியுள்ள சரீரம் உயிரோடிருக்கும் என்பது நமக்கு தெளிவாகிறது. எனவே, உயிருள்ள ஒரு சரீரத்தில், அதாவது கருவில் உயிர் உண்டாகும் போதே ஆன்மா உண்டாகி விடுகிறது.

எனவே, ஆரம்பம், ஆன்மா உண்டாகுதல் இரண்டுமே ஒரு குழந்தை கருவில் இருக்கும்போதே தேவனால் உருவாக்கப்படுகிறது.

அருமையான பிள்ளைகளே! இந்த அரிய உண்மையை இளம் வயதிலேயே நாம் அறிந்து கொள்வோமாக! ❋

## மருத்துவக் குறிப்பு (தலைவலி)

**பொது**வாக, "வலி" (Pain) என்பது நமக்கு சிரமத்தையும், துன்பத்தையும் கொடுத்தாலும், ஒருவகையில் "வலி" நன்மையான தாகவே இருக்கிறது. இது நம்முடைய சரீர ஆரோக்கியம் சம்பந்தமாக நமக்குக் கிடைக்கும் ஓர் எச்சரிக்கை. ஆயினும் சிலநேரங்களில், "புற்று நோய்" (Cancer) போன்ற உயிர்கொல்லி நோய்கள் வலியை உண்டாக்காமலே பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது.

தலை வலி என்பது அநேகரிடத்தில் காணப்படக்கூடிய ஒரு பிரச்சனையாகவே உள்ளது. தலை வலிக்கு வித்தியாசப்பட்ட காரணங்கள் இருக்க வாய்ப்பு உண்டு.

**அடிக்கடி தலை வலி வருவதற்கான காரணங்கள் என்ன?**

❋ *உயர் இரத்த அழுத்தம்* ❋ *பார்வைக் கோளாறு* ❋ *அமைதியின்மை*

இம்மூன்றும் பலருக்குக் காணப்படும் பொதுப்பிரச்சனை

**சரி இதற்கு என்ன செய்யலாம்?**

- தலைவலி வரும்போது Paracetamol - 1gm எடுத்துக்கொள்ளலாம். இது எவ்வித பக்கவிளைவையும் ஏற்படுத்தாது.
- ஆனால், உடனே மருத்தவரிடம் சென்று தலைவலிக்கான காரணங்களைக் கண்டுபிடிக்காமல் தொடர்ந்து மாத்திரையை மட்டும் எடுத்து வருவது ஆபத்தானது.
- ஏனெனில், தலைவலிக்கு காரணமான நோய் முற்றிக்கொண்டே போகும்.
- அடிக்கடி தலைவலி வரும்போது, பார்வை, இரத்த அழுத்தம் ஆகிய இரண்டையும் முதலில் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

(தொடரும்) Dr. ஜேபில் நாயகம், CMC வேலூர்.

# " ஆவிக்குரியவர்களாயிருங்கள் என்று பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தல் "

**Sis. B.B. CHOATE**

தலைமுறைகள் பல கடந்தும், கிராமப்புறங்களில் வசிக்கும் பலமக்கள் தங்கள் கைகளால் வேலை செய்தே தங்கள் பிழைப்பை நடத்துகின்றனர். சரீர வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள சூரிய உதயம் முதல் மறைவு மட்டும் வேலை செய்கிறார்கள். இன்றைக்கும், உலகின் பல இடங்களிலே, தங்கள் வாழ்க்கையின் பெரும்பாலான நேரங்களை, உண்ணவும், உடுக்கவும், இருப்பிடத்திற் காகவுமே செலவு செய்து கொண்டிருக்கின்றனர்.

காரியங்கள் இவ்வாறு இருந்தபோதிலும் ஒவ்வொரு சரீரத்திற் குள்ளேயும், அழியாத தன்மையை உடைய அமைதியான ஆவி ஒன்று உள்ளது. அதுதான் உண்மையான மனிதன், வாழ்க்கை முழுவதும் இந்த ஆவியானது கேட்பாரற்று, ஆவிக்குரிய போஷாக்கு இல்லாமல் அழுது, ஒரு அதிருப்தியான நிலையை உருவாக்கி, நிறைவின்றி எப்போதும் இந்த சரீரத்தையே முக்கியமாக நினைத்துக் கொண்டிருக்கிற மனிதனுக்குள் முடங்கிக் கிடக்கிறது.

பெற்றோர்கள் நல்ல பெற்றோர்களாக இருக்க வேண்டுமானால் தங்கள் கையில் தவழும் அன்புச் செல்வங்களின் சரீரத் தேவைகளை மட்டும் சிந்திக்காமல் அதற்குள் இருக்கிற ஆன்மாவையும் நினைக்க வேண்டும். அப்படியானால், பிள்ளைகள் பசிக்காக அழும்போது ஆகாரத்தோடு மட்டுமின்றி ஆவிக்கேற்ற உணவையும் ஜாக்கிரதையாக வழங்க வேண்டும்.

உலகிலே வாழ்ந்து கொண்டு, சரீரத் தேவைகளையும் சந்தித்துக் கொண்டு, ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்வது " எப்படி " என்பது ஒரு சவாலான காரியமாகும். தகப்பன் சம்பாத்யம் பண்ண வெளியே சென்று விடுவதும், தாய் வீட்டில் இருந்து குடும்பத்தைக் கவனிப்பதும், ஒருவேளை மிக குறைந்த நேரத்தையே ஆவிக்குரியக் காரியங்களுக்காக செலவிட நேரிடும்.

**ஆவிக்குரிய வளர்ச்சியடைய தொடர்ந்து கைகொள்ள வேண்டிய சில முக்கிய காரணங்கள்**

1. கர்த்தருடைய சபையில் ஒரு விசுவாசமுள்ள நபராக இருத்தல்
2. சபை கூடி வருதலை ஒருபோதும் அசட்டை பண்ணாதிருத்தல்
3. தேவனுடைய உதவிக்காக ஜெபித்து ஒவ்வொரு நாளையும் துவங்குதல்.
4. தினமும் குடும்பமாக அமர்ந்து வேதம் வாசிப்பதற்கு நேரத்தை ஒதுக்குதல்

அநேகக் கிறிஸ்தவக் குடும்பங்களில் பார்த்தால், இவையாவும் ஒழுங்காக அனுசரிக்கப்பட்டும், ஆவிக்குரிய ரீதியில் தேறவேண்டிய அளவு தேறாமல் இருப்பார்கள். ஆவிக்குரிய காரியங்கள் உயிருள்ள ஒரு நிலையில் இருக்காது. அதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால் பெற்றோர்களாகிய நாம்தான் பிள்ளைகளுக்குச் சொல்லுகிற அளவு நாம் செயலில் காட்டுவதில்லை. இதைத்தான் அன்றைய நாட்களில் இருந்த பரிசேயரைப் பற்றி இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கூறும்போது , " ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள். அவர்கள் செய்கை யின்படியோ செய்யாதிருங்கள். ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள். (மத். 23:3) என்றார். இரண்டு மாறு பட்ட கருத்துக்களைப் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு முன் வைக்கிறார்கள். தேவன் தான் முக்கியம் என்று தங்கள் வாயினால் பிள்ளைகளிடம் சொல்கிறார்கள். ஆனால், காரியங்களைக் கையாளுகிற விஷயத்தில் அவர்கள் தேவனுக்கு இடம் கொடாமல் உலக பிரகாரமாகவே ஜீவிக்கிறார்கள்.

உண்மையாகவே நம் பிள்ளைகள் ஒரு ஆழமான ஆவிக்குரிய வாழ்க்கை வாழ வேண்டுமென்றால், அது பெற்றோர்களாகிய நாம் நடத்திக் கொண்டிருக்கும் வாழ்க்கை முறையைத் தழுவியது தான். சில காரியங்கள் சிந்தனைக்காக.

1. ஆவிக்குரிய குடும்பத்தில் (சபை) அங்கமாக இருக்கும் நான் எந்த அளவு என் சரீர வாழ்க்கையை மாற்றியுள்ளேன், ஒவ்வொரு நாளும், நிமிடம் தோறும் தேவனோடு என்னுடைய உறவு எந்த அளவு உள்ளது. ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு கிறிஸ்தவனாக இருந்துவிட்டு திங்கள் கிழமை எதிர்கொள்ளும் ஒரு பிரச்சினையை எவ்வாறு கையாளுகிறேன்; சோதனைகள் வரும்போது எந்தளவு பொறுமையைக் காட்டுகிறேன்; ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நான் கீழ்ப்படிகிற விஷயத்தில் நான் எவ்வாறிருக்கிறேன். என்னுடைய எண்ணமும், என் பேச்சும் எவ்வளவு சுத்தமாயிருக்கிறது என்னுடைய நடத்தை கிறிஸ்துவின் சிந்தை உடையதாக இருந்தால், பிறகுதான் சுலபமாக கிறிஸ்துவின் போதனைகளை, செயல்களை என் பிள்ளை களுக்குப் புகட்ட முடியும்.

2. தேவனுடைய சமூகத்தில் அவரைத் தொழுது கொள்வது எனக்கு மிக முக்கியமான காரியமாகும். அப்படியானால் என்னைப் பார்த்து என் பிள்ளைகள் வளரும்போது ஆராதிப்பது என்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம் என்று நினைப்பார்கள். பிரசங்கத்தில் கேட்ட கருதுதுக்களை அவர்கள் வாரம் முழுவதும் நினைத்துக் கொண்டேயிருப்பார்கள். சபையாக ஒன்றாக கூடி வரும் போது கிடைக்கும் பலன் அடுத்த முறை

கூடுதலை ஆவலோடு எதிர்நோக்கும். ஆவிக்குரிய விஷயங்களைப் பற்றி கலந்தாலோசித்து, ஒவ்வொரு நாளும் செயல்படுவது குடும்ப வாழ்வுக்கு முக்கியமான ஒன்றாகும்.

3. அன்றாட வாழ்வில் நான் பங்கு கொள்ளும் காரியங்கள், என்னுடைய காரியங்களை தேவனுக்கு தெரிவிக்கும் வகையில், ஜெபம் ஓர் உயிரோட்ட கருவியாக உள்ளது. ஏதோ வார்த்தை ஜாலங்களால் ஜெபிக்காமல் தேவனோடு சம்பந்தப்பட்டு உரையாடல் செய்ய வேண்டும். தீர்மானங்கள், பிரச்சினைகள், எதிர்பாராமல் கிடைத்த நன்மைகளுக்காக நன்றி சொல்லுதல், பாதுகாப்பு, மற்ற எந்த ஒரு அன்றாட தேவைக்காகவும் ஜெபிக்கப்பட வேண்டும். இதனைப் பார்க்கும் பிள்ளைகள் இயற்கையாகவே ஜெபத்தின் அவசியத்தை உணர்ந்து கொள்வார்கள்.

4. இவ்வுலகில், அறிவியல் உண்மை என்னவென்றால் உயிரற்ற பொருள் புதிய உயிரை உண்டு பண்ண இயலாது. ஆவிக்குரிய வாழ்விலும் இதுதான் உண்மை. இதுதான் சட்டம். உயிரற்ற ஆன்மா மற்றவர்களுக்கு உயிரை கொடுக்கவே முடியாது. " நம் பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்வில் உயிரோடு, செழித்து காணப்பட வேண்டுமானால் இதற்கு ஒரே ஒரு வழி பெற்றோராகிய நாம். நம் ஆன்மாவை வாழவிட வேண்டும். சிலர் தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாகவும் இருப்பார்கள் " (2 தீமோ. 3:5).

தேவனோடு நாம் ஓர் உயிருள்ள உறவு வைத்திருந்தால் நம் நினைவு, செயல், எண்ணம் போன்றவைகள் தேவனுக்கடுத்தவைகளாக இருக்கும். இதற்காகத்தான் நாம் முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் இந்த விலை மதிக்க முடியாத வாழ்க்கை நம் உடமைகளாகிய பிள்ளைகளுக்கு விட்டுச் செல்ல முடியும்.

கிறிஸ்துவுக்குள் அருமையான தாய்மார்களே! பிள்ளைகளை ஆவிக்கேற்றபடியாக வளர்க்க வேண்டுமானால் நாம் முதலில் வாழ வேண்டும். ஆத்துமாவை வாழவிட்டால் தான் அது உயிர்பெறும். இதைப் பார்க்கும் நம் பிள்ளைகளும் அதை பின்பற்றுவார்கள். ❋

## பாடுகள் நன்மையாக முடியுமா?

**ஆ**ம்! பாடுகள் நன்மையாகவும் முடியலாம். உதாரணமாக, " வலி " (Pain) என்ற உணர்வே இல்லையானால் என்னாகும்? நம்முடைய உடையில் தீப்பற்றிவிட்டால், என்ன நடந்திருக்கிறது என்று தெரியும் முன்பே சரீரம் முழுவதும் வெந்து போகும். அதுமாத்திரமல்ல, மனிதன் தன்னுடைய தலையாயப் பண்புகளை வளர்ப்பதற்குப் பாடுகள் உதவி செய்கிறது. பொறுமை, தைரியம் போன்ற அருங்குணங்கள் பாடுகள் மூலம் கிடைப்பவை. " பாலைவனம் இருக்கும் இடத்தில் தான் சூரிய வெளிச்சம் இருக்கும் ".

# மதமாற்றமா? மனமாற்றமா?

Bro. V. தானியேல் துரைராஜன்

மனமாற்றமே ஆம்! கிறிஸ்தவம் யாரையும் மதமாற்றம் செய்வது கிடையாது. மனமாற்றத்தையே செய்கிறது. " *ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றிக் கொள்வது* " என்று ஆக்ஸ்போர்டு ஆங்கில அகாரதி சொல்லுகிறது. இதை ஒருவன் கட்டாயத்தினால் செய்ய முடியாது.

**I. மனமாற்றம்** (conversion) **என்பதற்குரிய சரியான விளக்கம் என்ன?**

இதற்குரிய சரியான பதிலை பரிசுத்த வேதாகமம் மாத்திரமே நமக்குத் தெளிவாகக் கொடுக்கமுடியும். மனமாற்றத்துக்குரிய தேவை மாற்றமே (Change) அநேக மாற்றங்கள் இயற்கையாகவே நிகழுகிறது. "*மரமானது மாற்றம் பெற்று காகிதமாகிறது*. ஒரு சிறு நிலக்கரியோ அநேக மாற்றங்களைப் பெற்று வைரமாக ஜொலிக்கிறது. "

ஆன்மீக மாற்றம் என்றால் பாவ வாழ்க்கையிலிருந்து நீதிக்குரிய வாழ்க்கைக்கு மாறுவது, மத்தேயு 18:3ல் இயேசு சொல்லுகிறார் "*நீங்கள் மனமாற்றமடைந்து, சிறுபிள்ளைகளைப் போல் மாறாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.* "

ஒரு மனிதன் அல்லது ஒரு மனுஷி மனமாற்றம் அடைகிறார்கள் என்றால் அவர்களுடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையான பஞ்சம் ஏற்பட்டுள்ளது என்றுதான் அர்த்தம். பஞ்சமென்றால் உணவினால் ஏற்படும் பஞ்சமல்ல, வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றியும் வாழ்வதன் நோக்கத்தைப் பற்றின பஞ்சமே ஏற்பட்டிருக்கிறது. இவர்களுடைய மன சாட்சி வாதிக்கப்பட்டு, சர்வவல்லமையுள்ள தேவனுடைய வார்த்தைகள் தொடர்ந்து ஆத்துமாவில் ஒரு பாரத்தை ஏற்படுத்தி அவர்களை , நான் என் பாவத்துக்காக என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்வியை கேட்க வைக்கிறது.

ஆத்துமாவில் எல்லாவற்றையும் விற்று போட்ட உணர்வு (லூக். 15:13,14) உலக சிற்றின்பங்கள் யாவும் வீணானவைகளாகி விடுகின்றன. தேவனுடைய சித்தத்திற்கு அவர்கள் உட்படும்வறை அவர்களுக்கு சமாதான மேயில்லை. மனித வாழ்க்கை பற்பல ஆபத்துக்களையும் துன்பங்களையும் சுமந்த ஜீவியமாயிருப்பதாலும் மரணம் அவனுக்கு கண்டிப்பான ஒன்றாக இருப்பதாலும் தேவனில்லாமலும், கிறிஸ்துவைச் சாராமலும் ஆவிக்குரிய விளக்கங்களை ஆராய முற்படுவதும் ஆக்கினைக் கேதுவாக்கிடும். ஆகவே ஒருவன் மனமாற்றமடைதல் வேண்டும்.

**மனமாற்றத்தில் அடங்கியுள்ளவைகள்**

1. மாற்றப்பட்ட இருதயம்:- இது விசுவாசத்தினால்தான் முடியும். (அப் 15:9)
2. மாற்றப்பட்ட ஆவிக்குரிய அதிகாரம்:- இது கிறிஸ்துவை அறிக்கையிடு வதால் வருகிறது. (ரோமர் 10:10; அப் 8:37).
3. மாற்றப்பட்ட நிலை:- திருமுழுக்கினால் ஏற்படும் உணர்வுகளின் மாற்றம் (கலா. 3:26,27) மனமாற்றம் (CONVERSION) கண்டிப்பாக ஒவ்வொரு வருக்கும் தேவை. காரணம் மனமாற்றமடையாத ஒரு பாவி தேவனால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டான். அவன் தேவனைச் சந்திக்கும் தகுதியையும் இழந்துவிடுகிறான். பாவிகள் யாவரும் பரிசுத்தவான்களாக மனமாற்ற மடைதல் வேண்டும். இது ஒரு மகத்தான காரியம் இதை தேவன்தான் செம்மையாகச் செய்து முடிக்க முடியும்.

ஒருவேளை, நான் மனமாற்றமடைந்து ஆண்டவரை அறிய, வாழ்க்கையில் சரியான மாற்றம் பெற நான் என்னைத் தாழ்த்தி, ஆண்ட வரைத் தேடி, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தேவனுடைய ஒரே பேறான குமாரன். இந்தப் பூமிக்கு வந்து நம்மை மீட்க, தம்மையே ஒப்புக்கொடுத்தார். (ரோமர் 5:8) அவர் சிலுவையில் தொங்கி காயப்பட்டு, நொறுக்கப்பட்டார். ஒரு பாவி மனந்திரும்பி. அவருடைய சுவிசேஷத்துக்குக் கீழ்படியும்போது அவரால் தான் அவனை மன்னிக்க முடியும்.

**இன்றைக்கு நீ மன மாற்றமடைந்திருக்கிறாயா?**

**மதமாற்றமல்ல! மனமாற்றம்?!**

## நியாயதீர்ப்பில் வந்து நிற்போர்

| | | |
|---|---|---|
| 1. | சோதோமின் ஜனங்கள் | - மத். 11:23,24 |
| 2. | தென் தேசத்து ராஜஸ்திரீ | - மத். 12:42 |
| 3. | நினிவேயின் ஜனங்கள் | - மத். 12:41 |
| 4. | தீரு, சீதோன் ஜனங்கள் | - மத். 11:21,22 |
| 5. | கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்தவர்கள் | - மத். 11:20 |
| 6. | தெசலோனிக்கே பட்டணத்து மக்கள் | - 2 தெச. 1:7-10 |
| 7. | எல்லா ஜனங்களும் | - மத். 25:31-46 |

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

## பாடம் - 44 இயேசுவை பின்பற்றுதல்

### Bro. K. பாஸ்கர்

" **ஆ**ண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்ற உளமார எண்ணம் கொண்டிருக்கிற மக்கள் மத்தியில் ஆண்டவர் உவமைகளாகப் போதித்தார். அந்த உவமைகளில் இயேசுவைப் பின்பற்றுதல் பற்றி கிறிஸ்து கூறும் உவமை செல்லுஞ் செலவைக் கணக்குப்பார்த்தல் இம்மாத கட்டுரையில் படித்துப் பார்த்து வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து அதைப் பின்பற்றுவோமாக! " (லூக்கா 14:25-35).

### I. தன்னையே வெறுக்க வேண்டும் :

ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றுதல் என்பதை அநேகர் தவறாக புரிந்து கொண்டு தங்களின் குடும்பத்தையே வெறுத்து வீட்டை விட்டு வெளியேறி விடுகிறார்கள். வெறுக்க வேண்டும் என்பதை சரியாகப் புரிந்து கொண்டு வாழ வேண்டும். இந்தக் காரியத்திற்கு கிறிஸ்து உவமைகளாகப் போதித்தார்.

உவமை ஒன்று. கோபுரம் கட்டுகிறவன். உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து அஸ்திவாரம் போட்ட பின்பு முடிக்கத் திராணியில்லாமற் போனால், பார்க்கிறவர்களெல்லாரும் இந்த மனுஷன் கட்டத் தொடங்கி முடிக்கத் திராணியில்லாமற் போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம் பண்ணாதபடிக்கு அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ் செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோ.

உவமை இரண்டு. யுத்தத்திற்கு போகும் ராஜா. அன்றியும் ஒரு ராஜா மற்றொரு ராஜாவோடு யுத்தஞ் செய்யப் போகிறபோது தன் மேல் இருபதாயிரம் சேவகரோடே வருகிற அவனைத் தான் பதினாயிரம் சேவகரைக் கொண்டு எதிர்க்கக் கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனைப் பண்ணாமலிருப்பானோ? கூடாது என்று கண்டால் இன்னும் தூரத்தி லிருக்கும் போதே ஸ்தானாபதிகளை அனுப்பி சமாதானத்துக்கானவைகளைக் கேட்டுக் கொள்வானே. இந்த உவமைகளில் இயேசு கூறுவது, அவரைப் பின்பற்றுதல் சிந்தித்து பின்பற்ற வேண்டியது என்பது. அவசரமாகப் பின்பற்றி பாதியில் நின்று விடுவது என்பது கூடாது. இயேசுவின் போதனையைப் புரிந்து கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டும். இயேசு கிறிஸ்து தன்னைப் பின்பற்ற வருகிற ஏரா!ளமான மக்களைப் பார்த்து யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரர்களையும், சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான். தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்கும் சீஷனாயிருக்கமாட்டான் என்றார். இயேசு கூறும் நிபந்தனைகளில் ஒன்று "வெறுக்க" வேண்டும் என்பது. அதை நேரடியாக எடுத்துக் கொண்டு அநேகர் தங்கள் குடும்பத்தை வெறுத்து காவி உடையை

அணிந்து கொள்வார்கள். அல்லது இயேசுவைப் பற்றுகிறேன் என்று சொல்லி வீட்டை விட்டு ஓடிப் போய்விடுவார்கள். அல்லது சாமியாராகப் போய் விடுவார்கள். அப்படி அல்ல, வெறுக்கச் சொன்னவர் நேசிக்க சொல்கிறார் (மத் 15:4)

தகப்பனையும், தாயையும் கனம் பண்ண வேண்டும் என்றார். அப்படி என்றால் இயேசு கூறும் வெறுப்பு என்றால் கிறிஸ்துவுக்கு எல்லா உறவினர் களைக் காட்டிலும் முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதே. நமது அன்பு, ஆசை, பற்று எல்லாம் உலகக் காரியங்களில் உள்ளதை விட இயேசுவுக்கும் அவருடைய போதனைக்கும் முதலிடம் கொடுக்க வேண்டும் என்கிறார். இது தான் தன்னையே வெறுத்தலாகும்.

## II. இயேசுவின் போதனையில் நிலைத்திருக்க வேண்டும்

இயேசு கிறிஸ்து எதற்காக பூமிக்கு வந்தார்.? ஏன் ஒரு சபையை ஸ்தாபித்தார்? என்பதை உணராமல் அவரைப் பின்பற்றுவது மதியீனமான செயல். அவர் வந்த நோக்கத்தையும், ஒரு சபையை உண்டாக்கிய விதத்தையும் புரிந்து கொண்டு அதில் நிலைத்திருக்க வேண்டும். அப்படி நிலைத்திருப்பவன் தான் உண்மையான சீஷன் (யோவான் 8:31) அவருடைய போதனையும், அவர் ஒரு சபையை கட்டியதும் (மத். 16:18) மகத்தானது. பல மார்க்க பிரிவினைகள் தேவையில்லை என்று ஒரு சபையை ஏற்படுத்தியது எல்லாம் மகத்தானது. வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தர் பந்தியில் நிலைத் திருப்பது ஒரு சபையாம் கிறிஸ்துவின் சபையில் நிலைத்திருப்பது. ஒருவன் ஒரு மைல் தூரம் பலவந்தம் பண்ணினால் இரண்டு மைல் தூரம் போக வேண்டும். பகைவரை நேசிக்க வேண்டும், துன்புறுத்துபவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். உலக சம்பத்துக்களை இலவசமாய் தானம் செய்து பரலோகில் பொக்கிஷத்தை சேர்த்து வைக்க வேண்டும். எல்லா காரியத்துக்கும் வரும் முன்பு முதலில் தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேட வேண்டும் என்ற இயேசு கிறிஸ்துவின் போதனையில் நிலைத்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட உபதேசத்தில் நிலைத்திருந்து அவரைப் பின்பற்ற வேண்டும். அவர்களே மெய்யான கிறிஸ்தவர்கள் (யோவான் 15:1-10).

## III. முடிவு பரியந்தம் நிலைத்திருக்க வேண்டும் :


கிறிஸ்தவ ஜீவியம் என்பது சீக்கிரமாய் ஓடி தீர்க்கக்கூடியதல்ல. அது நீண்ட தூரம் பொறுமையுடன் ஓடக்கூடியது. (எபி. 12:1) அநேகர் கிறிஸ்தவ ஜீவியம் சுலபமாக இருக்கும்வரை இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவார்கள். பல பிரச்சனைகள் கடினமான, கசப்பான சில அனுபவம் வரும்பொழுது பின் வாங்கிப் போவார்கள். கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொருவரும் முன் யோசனை செய்து உறுதியான மனப்பக்குவத்தையும், அதற்கான தகுதி யையும் பெற்று அவரைப் பின்பற்ற வேண்டும். முடிவு பரியந்தம் அதாவது, நமது மரண பரியந்தம் தொடர்ந்து அவரைப் பின்பற்ற வேண்டும். அப்பொழுது ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்வோம். (வெளி. 2:10).



17.8.2014 அன்று திருப்பூரில்
நடைபெற்ற நற்செய்திக்
கூட்டத்தின் போது ஆசிரியர்



29.8.2014 அன்று திருப்பூரில்
நடைபெற்ற வாலிபர் கூட்டத்தில்
கலந்து கொண்டவர்கள்




2014 செப்டம்பர் 2,3,4
தேதிகளில்
ஏற்காட்டில் நடைபெற்ற
ஊழியர் கூட்டத்தில்
கலந்து கொண்ட ஊழியர்கள்





2014 செப்டம்பர் 2,3,4
தேதிகளில்
ஏற்காட்டில் நடைபெற்ற
ஊழியர் கூட்டத்தில்
கலந்து கொண்ட சகோதரிகள்


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014**


# எங்களது இதர வெளியீடுகள்


















சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.